[1973 நவம்பர் 26

மணிமுத்தாறு திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நிலங்கள்.

** 398 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர்* : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தாலுக்கா, மணிமுத்தார் நீர்த் தேக்கம் கட்டுவதற்காகப் பொதுமக்களிடம் இருந்து அரசு எடுத்துக் கொண்ட நஞ்சை, புஞ்சை நிலங்களுக்குரிய தொகை கொடுக்கப்படாமல் இருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) மணிமுத்தார் நீர்த்தேக்கம் கட்டுவதற்காகப் பொது மக்களிடம் இருந்து அரசு எடுத்துக் கொண்ட நஞ்சை புஞ்சை நிலங்களுக்குரிய ஈட்டுத் தொகை பூராவும்—சிங்கம்பட்டி ஜமீன் கிராமத்தில் அரசினால் எடுத்துக் கொள்ளப்பட்ட 52.95 ஏக்கர் நிலங்களுக்கான தொகையைத் தவிர்த்து நிலச் சொந்தக்காரர்களுக்கு 1956 ஆம் ஆண்டிலேயே கொடுக்கப்பட்டுவிட்டது. இந்த 52.95 ஏக்கர் நிலங்களும், அரசினரால் 1952 ஆம் ஆண்டில் ஜமீன் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட சிங்கம்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவை. உதவி நில வரித் திட்ட அதிகாரி சிங்கம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த இந்நிலங்கள் புஞ்சை அனாதியாகுமென்றும் (unassessed waste) ஆகவே, அரசினரைச் சேர வேண்டும் என்றும் முடிவு செய்தார். இத் தீர்ப்பை எதிர்த்து நிலத்துக்குச் சொந்தம் கொண்டாடிய நபர்கள் மேல் அதிகாரி களிடம் முறையீடு செய்து தங்களுக்குச் சாதகமாக ரயத்துவாரி பட்டாவும் பிற்பாடு பெற்றுவிட்டனர். ஆகவே, அந்த நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து நிலத்தை எவ்வாறு எடுத்துக் கொள்வது, அதாவது நில ஆர்ஜிதச் சட்டத்தின் கீழ் நிலங்களை எடுத்துக் கொள்வதா அல்லது நிலங்களைத் தனிப்பட்ட முறையில் நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து விலைக்கு வாங்கிக் கொள்வதா என்பது குறித்து முடிவெடுக்க வேண்டியிருந்ததாலும் இவ்வாறு முடிவெடுப்பதில் ஏற்பட்ட தவிர்க்க முடியாத சில தடங்கல் களாலும், இவற்றுக்குரியவர்களுக்கு ஈட்டுத் தொகை உடனே கொடுக்க முடியாத ஒரு தேக்க நிலை ஏற்பட்டது.

1973 நவம்பர் 26]

மொத்தம் 52.95 ஏக்கரில் 36.33 ஏக்கர் நிலங்களுக்கான ஈட்டுப் பணம் கடந்த 30—3—1973 அன்றும், மேலும் 0.90 ஏக்கருக்கான இழப்பீட்டுத் தொகை 25—7—1973 அன்றும் கொடுக்கப்பட்டு விட்டது. மீதமுள்ள நிலங்களுக்கான ஈட்டுத் தொகையும் அதிவிரைவில் தரப்பட்டுவிடும்.

முள்ளிப்பாடி வாய்க்கால் சீரமைப்பு

*** 399 வினா—திரு. சி. க. வடிவேலு :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், தொட்டியம் தொகுதியைச் சார்ந்த முள்ளிப்பாடி வாய்க்கால் சீரமைப்புத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. க. வடிவேலு : இந்த வாய்க்காலைச் சேர்ந்த விவசாயிகள் அந்தத் திட்டம் நீண்ட காலமாக வர வேண்டுமென்று எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இதை மறு பரிசிலனை செய்து அரசு எதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்தத் திட்டம் 1959 ஆம் ஆண்டு முடிக்கப்பட்டது. அப்பொழுதே மதகுகள் கட்ட வேண்டும் என்று எந்தவிதமான குறிப்பும் செய்யவில்லை. இப்பொழுது கட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டதினால், 30 குழாய் மதகுகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டதாக அரசுக்குத் தகவல் இருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்த முள்ளிப்பாடி வாய்க்கால் பகுதியில் தற்போது ஒரு போக சாகுபடிக்கு வாய்ப்பு இருக்கிறது. மதகு வேலைகள் விரைவாக கட்டி முடிக்கப்பட்டால் மேலே உள்ள பகுதிகள் இரண்டு போகம் சாகுபடி செய்வதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆகவே, இந்த வேலையை விரைவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?